## சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு / தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வுகள் – தேர்வுக் காலப் பணிகள் மற்றும் விடைத்தாள் திருத்தும் முகாம் பணிகள் மேற்கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு உழைப்பூதியம் / மதிப்பூதியம் உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வி (ஜிஇ(1) துறை

**அரசாணை (1டி) எண். 270**

**நாள் :24.04.2017**

திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி வருடம், சித்திரை – 11

**படிக்கப்பட்டவை:--**

1. அரசாணை (1டி) எண்.306, பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை, நாள் 23.10.2013.
2. அரசாணை (நிலை) எண்.45, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 01.03.2011.
3. அரசாணை (நிலை) எண்.119, பள்ளிக் கல்வித் (வி1) துறை, நாள் 17.07.2006.
4. அரசாணை (நிலை) எண்.200, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 22.09.2008.
5. அரசு தேர்வுகள் இயக்குநர் கடிதத்தில் ந.க.எண்.055367/ எச்.2–1/2014, நாள் 28.01.2015, 18.07.2016 மற்றும் 05.10.2016.

~*~~*~

**ஆணை:–**

மேலே ஒன்று மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தேர்வுக் காலத்தில் பணியில் ஈடுபடும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கான மேல்நிலை/இடைநிலை/ எட்டாம் வகுப்பு/ தொடக்க கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு உழைப்பூதியம்/மதிப்பூதியம் மற்றும் விடைத்தாள் திருத்தும் பணியினை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கான உழைப்பூதியம் ஆகியவைகள் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டன.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் விடைத்தாள் திருத்தும் பணியினை மேற்கொள்ளும் ஆசியர்களுக்கும், விடைத்தாள் மதிப்பீடு முகாம்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான உழைப்பூதியம் உயர்த்தி வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசுத் தேர்வுத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகளின் விடைத்தாள் திருத்தும் பணி தொடர்பாக விடைத்தாள் மதிப்பீட்டு மையங்களில் பணி மேற்கொள்ளும் பல்வேறு நிலை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவந்த சீற்றுண்டி மற்றும் கைப்பிடி செலவினை உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. தற்போது, பார்வை 5-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்காணும் பொதுத் தேர்வுகளின் போது பணியாளர்கள் அதிக நேரம், பொறுப்புடன் பணிபுரிய வேண்டிய சூழல் மற்றும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு தற்போது வழங்கப்பட்டு வரும் உழைப்பூதியம்/மதிப்பூதியத்தை 15% உயர்த்தி வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு / தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வுகள் ஆகிய தேர்வுகளுக்கான முன்பணி மற்றும் பின்பணி தேர்வுக் காலப்பணிகளில் ஈடுபடும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்படுகின்ற உழைப்பூதியம் / மதிப்பூதியத்தை மார்ச், 2017 பொது தேர்வுகளிலிருந்து கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கிட முடிவுசெய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. :-

அ) மேல்நிலை / இடைநிலை / தொழில் நுட்ப தேர்வுக்கால பணிகளில் ஈடுபடும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு உழைப்பூதியம் / மதிப்பூதியத்தின் விவரம் :-

(ரூபாயில்)

| பதவி | மேல்நிலைத் தேர்வு | | இடைநிலைத் தேர்வு | | தொழில் நுட்பத் தேர்வு | |
|---|---|---|---|---|---|---|
| | பழைய செலவினம் | 15 % உயர்வு | பழைய செலவினம் | 15% உயர்வு | பழைய செலவினம் | 15% உயர்வு |
| தலைமைக் கண்காணிப்பாளர் | 115.00 | 133 | 92 | 106 | 115 | 133 |
| துறை அலுவலர்/ கூடுதல் துறை அலுவலர் | 80 | 92 | 57 | 66 | 92 | 106 |
| வினாத்தாள் கட்டு காப்பாளர் | 69 | 80 | 46 | 53 | 69 | 80 |
| தேர்வுக் கூட மேற்பார்வையாளர் | 69 | 80 | 46 | 53 | - | - |
| பறக்கும்படை உறுப்பினர் | 69 | 80 | 46 | 53 | - | - |
| வழித்தட அலுவலர் | - | 130 | - | 130 | - | 130 |
| எழுத்தர் | 57 | 66 | 46 | 53 | 58 | 67 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அலுவலக உதவியாளர் | 23 | 27 | 60 | 69 | 23 | 27 |
| தண்ணீர் வழங்குபவர்/ பெருக்குபவர்/ துப்புரவு பணியாளர் | 17 | 20 | 17 | 20 | 17 | 20 |
| செய்முறை தேர்வு உதவியாளர்/ ஆய்வக உதவியாளர் | 35 | 40 | 23 | 27 | –– | –– |
| உட்புற/வெளிப்புற தேர்வாளர் பேசுதல் / கேட்டல் (Aural/Oral) | 3.5 | 5 | – | – | – | – |

ஆ) முகாம் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான உழைப்பூதியம்

| வ. எண் | முகாமில் பணிபுரியும் பல்வேறு நிலை அலுவலர் மற்றும் பணியாளர்களின் பதவிகள் | பழைய உழைப்பூதியம் வீதம் (ரூபாய்) | உயர்த்தி வழங்கப்படவுள்ள உழைப்பூதியம் வீதம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | முகாம் அலுவலர் | ரூ. 750 (20 நாள் பணிக்கு ஒட்டு மொத்தமாக) | ரூ. 1,500 (20 நாள் பணிக்கு ஒட்டு மொத்தமாக) |
| 2. | மதிப்பெண் சரிபார்க்கும் அலுவலர் | ரூ. 600 (20 நாள் பணிக்கு ஒட்டு மொத்தமாக) | ரூ. 1,200 (20 நாள் பணிக்கு ஒட்டு மொத்தமாக) |
| 3. | தொடர்பு அலுவலர் | ரூ. 200 (20 நாள் பணிக்கு ஒட்டு மொத்தமாக) | ரூ. 500 (20 நாள் பணிக்கு ஒட்டு மொத்தமாக) |
| 4. | அட்டவணையாளர்/தரவு உள்ளீட்டாளர் | ரூ 20 (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) | ரூ.50 (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) |
| 5. | கண்காணிப்பாளர்/ எழுத்தர் | ரூ. 25 (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) | ரூ.50 (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) |

இ) விடைத்தாள் திருத்துபவர்களுக்கான உழைப்பூதியம்.

| வ. எண் | தேர்வு விவரம் | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட உழைப்பூதியம் ரூ. | உயர்த்தி வழங்கப்பட வேண்டிய உழைப்பூதியம் ரூ. |
|---|---|---|---|
| 1. | மேல்நிலை தேர்வு / ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு (3 மணி நேரம்) | ரூ.7.50 (தாள் ஒன்றுக்கு) | ரூ.10.00 (தாள் ஒன்றுக்கு) |
| 2. | இடைநிலைக் கல்வி | ரூ.6.00 (தாள் ஒன்றுக்கு) | ரூ.8.00 (தாள் ஒன்றுக்கு) |
| 3. | எட்டாம் வகுப்பு | ரூ.2.50 (தாள் ஒன்றுக்கு) | ரூ.5.00 (தாள் ஒன்றுக்கு) |

ஈ) விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் உள்ளூர் மற்றும் வெளியூர் பணியாளர்களுக்கான தொகுப்புபடி :–

| தேர்வுகள் | உள்ளூர் * பணியாளர்களுக்கான தொகுப்புபடி (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) | வெளியூர் ** பணியாளர்களுக்கான தொகுப்புபடி (நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு) |
|---|---|---|
| இடைநிலை | ரூ.80/– | ரூ.150/– |
| மேல்நிலை | ரூ.100/– | ரூ.200/– |

*சிற்றுண்டி மற்றும் கைப்பிடிச் செலவினத்திற்கு பதிலாக தொகுக்கப்பட்டுள்ளது.

**சிற்றுண்டி கைப்பிடிச் செலவினம், பயணப்படி மற்றும் அகவிலைப்படிக்கு பதிலாக தொகுக்கப்பட்டுள்ளது.

6. மேற்காணும் செலவினத் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும் : –

2202 பொதுத் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 108 தேர்வுகள் மாநிலச் செலவினங்கள் AA அரசுத் தேர்வு இயக்குநர் நடத்தும் தேர்வுகள் 33 தொழில் முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம் ( த. தொ.கு. 2202 02 108 AA 3321)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.22075/ADS(RSM)/2017, நாள் 24.04.2017-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

நகல் :-
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர்
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், சென்னை -9.
நிதி (கல்வி-II/வ.செ.பொது-I&II) துறை, சென்னை-9.
ப.ள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்களின்முதுநிலை முதன்மைச் தனிச் செயலாளர், சென்னை- 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.